# 2

# மரபுக் கவிதை

கவிதைகளில் வேறுபாடுகளைக் காண்கிறோம். ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு மாதிரியான கவிதைப் போக்கு அமைகிறது. கவிதையைச் சுவைப்பதிலும் ஆளுக்கு ஆள், காலத்திற்குக் காலம் வேறுபாடு இருக்கிறது.

சங்ககாலத்தில் உள்ளதை உள்ளபடியே வெளியிடுவது என்கிற போக்கையும், இடைக்காலத்தில் மிகையான கற்பனைப் போக்கையும், மீண்டும் தற்காலத்தில் உள்ளதை வெளியிடுகிற போக்கையும் காண்கிறோம். சங்க காலத்துப் பாலைத்திணைப் பாடல்களில் பாலை நிலத்தின் வறண்ட தோற்றம் உள்ளபடி அப்படியே காட்டப்பட்டுள்ளது. ஆனால் இடைக்காலத்தில் தோன்றிய சீவக சிந்தாமணியில், 'பாலை நிலத்தின் பெயரைச் சொன்னாலும் வாய் வேகும்' என்று மிகையாக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்வந்த கலிங்கத்துப் பரணியில் 'இராமன் கடலைக் கடக்கக் கற்களால் பாலம் கட்டியிருக்க வேண்டியதில்லை; இந்தப் பாலை மணலில் ஒரு மணலைப் போட்டால் போதும்; கடலையே குடித்திருக்கும்' என்று மேலும் மிகையாக்கப்பட்டுள்ளது.

முரண் உத்தி, முரண் தொடையிலிருந்து உருவானது. முரண்பட்ட நிலைகளை ஒருங்கே வைத்துக் காட்டி ஒரு கருத்து விளக்கப்படும். இவ்வுத்தி எளிதாக உள்ளத்தில் தொற்றிக் கொள்ளக்கூடியது. சுதந்திர நாளைப் பற்றிக் கவிஞர் அப்துல் ரகுமான் எழுதிய ஒரு கவிதையில்,

*இந்த நாள்*
*ஓர் அதிசய நாள்*
*பிள்ளைகள் கூடி*
*ஒரு தாயைப் பெற்ற நாள்!*

என்று நாட்டு மக்கள், 'தாய்' நாட்டின் விடுதலையைப் பெற்றெடுத்ததைப் பிள்ளைகள் தாயைப் பெற்றதாக முரண்பாட்டில் குறிப்பிடுகிறார். இவ்வுத்தி இன்றைய புதுக்கவிதைகளில் மிகுதியாக இடம் பெறுகிறது.

மேலைநாடுகளில் கவிதைச்சுவையை மேம்படுத்துவதற்காகப் பல இலக்கிய இயக்கங்களை நடத்தியிருக்கிறார்கள். அவற்றில் புனைவியல் (Romanticism), இயல்புஇயல் (Naturalism) மீமெய்ம்மையியல் ( Surrealism) குறியீட்டியல் (Symbolism) படிமவியல் (Imagism) ஆகியவை குறிப்பிடத்தக்க இயக்கங்கள். தமிழர்கள், கவிதையைப் பொறுத்தமட்டில் இயக்கம் காணவில்லை. ஆனால் மேற்குறிப்பிட்ட போக்குகளில் சங்க காலத்திலிருந்தே கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் படிமம், குறியீடு ஆகிய இரண்டும் சங்கத் தமிழ்க் கவிதையில் ஏராளமாக உள.

படிமம் என்பது சொல்ல வருகிற கருத்தை அல்லது ஒன்றை, அப்படியே மனக்கண்ணில் காணுமாறு சொல்லின் உதவியால் காட்சிப்படுத்துவது.

சங்கக் கவிதையில் 'கங்குல் வெள்ளம்','பருவரல் வெள்ளம்' என்றும் 'இருள் திணித்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்','நிலவு குவித்தன்ன வெண்மணல்' என்றும் படிமங்கள் அமைந்தன.

மழைமேகம், கறுத்து மின்னி முழங்கி மழைச் சரங்களைப் பொழிவதை ஆண்டாள் தம் கவிதையில் படிமப்படுத்தியிருப்பதை இடைக்காலத்தில் காண முடிகிறது.

.............................................................

*ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி*
*ஊழிமுதல்வன் உருவம் போல் மெய்கறுத்து*
*பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்*
*ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து*
*தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்*
*வாழ உலகினில் பெய்திடாய்........................*

என்று ஆண்டாள், மழை பெய்தலைச் சொற்களின் உதவி படிமப்படுத்திக் காணச் செய்கிறார்.

தற்காலக் கவிதைகளில் இப்படிமம் ஏராளமாக இருக்கி பாரதிதாசன், அடர்ந்த காட்டின் வெயில் நேரத் காட்சிகளை,

*அருவிகள் வயிரத் தொங்கல்*
*அடர்செடி பச்சைப் பட்டே*
*குருவிகள் தங்கக் கட்டி*
*குளிர்மலர் மணியின் குப்பை*
*எருதின்மேல் பாயும் வேங்கை*
*நிலவுமேல் எழுந்த மின்னல்*
*சருகெலாம் ஒளிசேர் தங்கத்*
*தகடுகள் பார டா நீ!*

என்று படிமம் அமைத்திருக்கிறார். புதுக்கவிதைகள் 'எது மோனையைக் கைவிட்ட பிறகு படிமத்தையும் குறியீட்டையு நம்பின.

குறியீடு என்பது சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லா சில குறியீடுகளைப் பயன்படுத்தி வாசகர் புரிந்துகொள் செய்கிறது. அப்துல் ரகுமானின் குறியீட் கவிதையொன்று,

*புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்*
*போலி நளன்களின் கூட்டம்*
*கையில் மாலையுடன்*
*குருட்டுத் தமயந்தி*

என்று சுயம்வரத்தைத் தேர்தலுக்கான குறியீடாக்கி மக் நலனில் அக்கறையற்ற போலி அரசியல்வாதிகளைப் போ நளன்களாக்கித் தங்கள் மீதே அக்கறையில்லாத வாக்கா கூட்டத்தைக் குருட்டுத் தமயந்திகளாக்கி உண்மை நளன்க அவலத்தையும் உண்மையை உணரத் தெரியாத தமயந்தி தவறான தேர்வையும் சுட்டிக் காட்டுகிறது.

கவிஞர் இன்குலாப்பின் 'மனுசங்கடா' கவிதையில் எ... உத்தி கையாளப்படுகிறது? உண்மை, அப்படி... சொல்லப்படுகிறது.

*மனுசங்கடா - நாங்க*
*மனுசங்கடா*
*ஒன்னைப்போல அவனைப் போல*
*எட்டுச்சாணு ஒசரமுள்ள*
*மனுசங்கடா - டேய்*
*மனுசங்கடா*

..............................................

*ஒங்க தலைவன் பொறந்த நாளு*
*போஸ்டர் ஒட்டவும் - ஒங்க*
*ஊர்வலத்துலே தரும அடியை*
*வாங்கிக் கட்டவும்*
*எங்க முதுகு நீங்க ஏறும்*
*ஏணியாகவும் - நாங்க*
*இருந்தபடியே இருக்கணுமா*
*காலம் பூராவும்?*

இந்தக் கவிதை ஒடுக்கப்பட்ட மக்களின் குரலா... வெடிக்கிறதே-இந்த உண்மை - இந்த உன்னதம் - இத... உத்திகள் தேவையின்றிக் கவிதை, கவிதையாகவே நிற்கிறது.

கவிதைச் சுவை என்பது பிரச்சினைகளிலிருந்... தப்பிப்பதற்காகக் கவிதையை நாடுவதல்ல; பிரச்சினையை புரிந்து கொள்வதற்காக; அதிலிருந்து தீர்வு பெறுவதற்கா... பிரச்சினைகளைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உத்திக... உதவினால் போதும்.

## கவிதை யாப்பு

கவிதைகளில் இலக்கணக் கட்டுப்பாடு உடையவற்ற... மரபுக்கவிதை என்றும் கட்டுப்பாடு இல்லாதவற்றை புதுக்கவிதை என்றும் பிரிக்கிறார்கள். மரபுக்கவி... நான்குவகைப் பாக்களில் எழுதப்படுகிறது. முதன் முதலி... தோன்றியது ஆசிரியப்பா என்கிற அகவற்பா. சங்... இலக்கியங்களில் பல, ஆசிரியப்பாவில் அமைந்துள்ள... வஞ்சிப்பாவும் அக்காலத்தில் எழுதப்பட்டது. அகம் புற...

இரண்டும் இவ்வாசிரியப் பாக்களிலும் வஞ்சிப்பாக்களிலும் பாடப்பட்டன. கலிப்பாவும் பாடப்பட்டது. சமணர்களின் வரவின் பின்னர் நீதி, பாடுபொருளாயிற்று, நீதியை மனத்தில் இருத்துவதற்காக மனப்பாடம் செய்வதற்கேற்ற வெண்பா யாப்பினை உருவாக்கிப் பாடினார்கள். கி.பி.2-ஆம் நூற்றாண்டிற்குள்ளாகவே இந்நான்கு பா வகைகளும் தோன்றிவிட்டன. அதன் பின் இகம் பரம் பற்றிக் கூறிய நாயன்மார், ஆழ்வார் பாடல்களில் கூட்டு வணக்கமாகப் பாடுதற்கேற்ற ‘விருத்தப்பா தோன்றியது. இன்று விருத்தம்தான் பெரும்பான்மை யாப்பாக இருக்கிறது.

இலக்கண நெகிழ்ச்சி என்பது காலந்தோறும் இருக்கிறது. தொல்காப்பியர் சொன்ன யாப்பிலக்கண விதிகள் இன்று பின்பற்றப்படுவதில்லை. செய்யுள் உறுப்புகளின் எண்ணிக்கை, சீர்களின் எண்ணிக்கை - இவற்றில் பிற்கால யாப்பிலக்கண நூல்கள் வேறுபடுகின்றன. துறை, தாழிசை, விருத்தம் போன்ற பா இன வகைகளுக்குச் சீர் வரையறை கட்டுப்பாடானதாக இல்லை. பாவினங்களுக்கும் தளை வரையறை இல்லை. வெண்பா தவிரப் பிற பா வகைகளுக்குத் தளை வரையறை கட்டுப்பாடானதாக இல்லை. பாவினங்களுக்கும் தளை வரையறை இல்லை. வெண்பா தவிரப் பிற பா வகைக்கு அடிவரையறையும் இல்லை; தொடை வரையறையும் இல்லை. புதிது புதிதாகத் தொடை வகை வரலாம் என்ற நிலை இருக்கிறது. இப்படி அனுமதிக்கப்பட்ட நெகிழ்ச்சிகளைக் கூற யாப்பிலக்கணத்தில் ‘ஒழிபியல்’ என்று தனிப் பிரிவு இருப்பது நம் கவனத்திற்குரியது.

இப்படி யாப்பு நெகிழ்ச்சி என்பது அனுமதிக்கப்பட்டு வந்திருப்பதன் விளைவாகப் ‘புதுக்கவிதை’ வடிவம் தோன்றியிருக்கிறது. வடிவமற்றது என்று சொல்லப் பட்டாலும் அது உரைநடையிலிருந்து மாறுபட்டதெனக் காட்டும் வடிவம் கொண்டிருக்கிறது. புதுக்கவிதை பற்றித் தனித் தலைப்பில் காண்போம். இங்கு மரபுக்கவிதை அல்லது யாப்புக் கவிதை பற்றிக் காண்போம்.

முன்பு, உரைகள் தவிர எல்லாமே செய்யுளில்தான் எழுதப்பட்டன. இலக்கணம், நீதி, தத்துவம், பக்தி, கதைகள், மருத்துவம், சோதிடம் எல்லாமே செய்யுளில்தான் எழுதப்பட்டன. சில உரைகள் கூடச் செய்யுளில் எழுதப்பட்டன.

அதனை 'உரைச்செய்யுள்' என்பார்கள். 'பாட்டு' அமைந்ததை 'பாச்செய்யுள்' என்பார்கள். மருத்துவம், சோதிடம், இலக்கண பற்றிய செய்யுள்களைக் கவிதை என்று யாரும் சொல்வதில்லை செய்யுள் என்பது உரைநடைக்குக் கொடுக்கப்பட் கட்டுப்பாடான வடிவம். யாப்பு எனில் கட்டுவது என் பொருள். மனப்பாடம் செய்ய வசதியாக இருக்கு என்பதற்காகவும் அது நிலைக்கவேண்டும் என்பதற்காகவு செய்யுளில் (யாப்பில்) எழுதினார்கள். கவிதை என்ற சொ பிற்காலத்தது. பரிபாடலில் தான் கவிதை என்ற சொ ஆளப்பட்டது. அதற்கு முன் பாட்டு என்ற சொல் கவிதைக்குப் பதிலாக ஆளப்பட்டது. குறிஞ்சிப்பாட் முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு முதலான தொடர்கள் இதனை உணர்த்துகின்றன. எனவே எல்லாம் செய்யுள் என்றாலு பாட்டு அல்லது கவிதை என்பது வேறுபட்டது எனலாம். ஓ நயம், சொல் நயம், பொருள் நயம் உடையதாகவு குறிப்புப்பொருள், அணி நலம் உடையதாகவும் இருப்பதை கவிதை என்றார்கள். நயமாக உள்ள எல்லாமே கவி என்றார்கள்.

யாப்பிலக்கணம், தொல்காப்பியர் முதற்கொண்டு பலரா சொல்லப்பட்டிருக்கிறது. யாப்பிலக்கணம் வளர்ச்சியடைந்தது மாறுதல் பெற்றும் வந்திருக்கிறது. காலத்திற்கேற்பவு பாடுபொருளுக்கேற்பவும் யாப்பு விதிகள் மாற்ற பெற்றிருக்கின்றன. தொல்காப்பியம், வீரசோழிய இலக்கணவிளக்கம், தொன்னூல், முத்துவீரியம், சிதம்பர பாட்டியல், சிதம்பரச் செய்யுட்கோவை, மாறன் பாப்பாவின என்று பல நூல்கள் யாப்பிலக்கணம் பற்றி விளக்கியுள்ள ஆயினும் அமிர்தசாகரர் எழுதிய யாப்பருங்கலக்காரிகை தா இன்று பின்பற்றப்படுகிறது. தற்காலத்தில் 'யாப்பதிகாரம் 'கவிஞராக', 'கவிபாடலாம்' முதலிய நூல்கள் யாப்பிலக்கண பற்றி எளிமையாக எடுத்துரைத்துள்ளன. இவை யாப்பு கவிதை எழுத முனைவோருக்கு உதவுவன.

உரைநடையில் சொற்கள் தனித்தனியாக இடம்விட் எழுதப்படும். ஆனால் யாப்புக் கவிதையில் ஓசைக்கு ஏற்ப சொற்களை உடைத்தோ முழுச் சொல்லாகவோ இரண் சொற்களை இணைத்தோ அமைப்பார்கள். இப்படி

அமைப்பதற்குச் சீர் என்று பெயர். சீர்களில் அசை இருக்கும். அசைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பச் சீர்கள், ஓசை வேறுபாடு கொள்ளும். சீர்கள் நான்கு அமைந்து வருவது சராசரி அடி அளவு. இது அளவடி எனப்படுகிறது. அந்த அளவைத் தாண்டி நீண்டு வருவது நெடிலடி எனப்படுகிறது. மிகவும் குறைவாக இரண்டு சீராக இருப்பது குறளடி எனப்படுகிறது. சராசரி அளவிற்குக் கீழே மூன்று சீராக இருப்பது சிந்தடி எனப்படுகிறது.

*இதந்தரு மனையி னீங்கி*
*இடர்மிகு சிறைப்பட் டாலும்*
*பதந்திரு இரண்டு மாறிப்*
*பழிமிகுந் திழிவுற் றாலும்*
*விதந்தரு கோடி யின்னல்*
*விளைந்தெனை அழித்திட் டாலும்*
*சுதந்திர தேவி நின்னைத்*
*தொழுதிடல் மறக்கி லேனே*

பாரதியார் இயற்றிய இக்கவிதை நான்கு அடிகளைக் கொண்டதாக இருக்கிறது. ஒவ்வோர் அடியிலும் ஆறுசீர்கள் வந்துள்ளன. இந்தச் சீர்களில் சொற்கள் இணைத்து எழுதப்பட்டிருக்கின்றன. (விளைந்தெனை விளைந்து + எனை). சொற்கள் பிரித்து எழுதப்பட்டிருக்கின்றன (சிறைப்பட்டாலும், அழிந்திட்டாலும், மறக்கிலேனே). சொற்கள் தனித்தும் எழுதப்பட்டிருக்கின்றன (இரண்டு கோடி, இன்னல், தேவி, தொழுதிடல், நின்னை, மனையின், நீங்கி). இச்சீர்களை உச்சரிக்கிறபோது அவை அசை அசையாகப் பிரிவதையும் (இதந்தரு- (இதந்+தரு), மனையி (மனை+யி), னீங்கி-(நீங்+கி) உணர முடிகிறது. இப்படிப் பிரிவதை அசை என்கிறோம். அசையில் ஓர் எழுத்து, இரண்டு எழுத்து, மூன்று எழுத்து வருகின்றன.

எழுத்துகளால் ஆனது அசை என்றும் அசைகளால் ஆனது சீர் என்றும் சீர்களால் ஆனது அடி என்றும் அடிகளால் ஆனது கவிதை என்றும் உணரமுடியும். சீர்களை இணைக்கும் முறையில் ஓசை வேறுபாட்டிற்காகவும் பா வேறுபாட்டிற்காகவும் வருபவை தளை தொடை முதலான கூறுகள். எனவே யாப்புக் கவிதையாயின் அதில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன அமைந்திருக்கும்.

*எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோ (டு)*
*இழுக்கா நடையது யாப்பெனப் படுமே*

என்று யாப்பருங்கலம், இலக்கணம் கூறுகிறது. அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியன பற்றிய சில இன்றியமையாத செய்திகளை அறிந்து கொள்வோம்.

## (1) அசை

தமிழின் 247 எழுத்துகளும் சீர்களில் இடம்பெறுகின்றன. எழுத்துகளைச் சீர்களாகச் சேர்க்கும் முறையை அசை என்கிறோம். எழுத்துகள், தனித்தும் இணைந்தும் வருவதே அசை. அசைகளை நேரசை, நிரையசை என இரண்டாக வகைப்படுத்தியுள்ளார்கள்.

| நேரசை | நிரையசை |
|---|---|
| தனிக்குறில் (க,அ) | குறில் இணை (பல) |
| தனிக்குறில்+ஒற்று (கல், அல்) | குறில் இணை+ஒற்று (நிறம்) |
| தனிநெடில் (சா,ஆ) | குறில் நெடில் (கனா) |
| தனிநெடில்+ஒற்று (கால், ஆல்) | குறில் நெடில்+ஒற்று (இரால்) |

### அசை பிரிக்கும் விதிகள்

* ஒரு சீரில் மட்டும் அசை பிரிக்க வேண்டும்.
* அசைகளைப் பிரிக்கையில் பொருள் பார்க்கக் கூடாது; பொருள் இருக்காது.
* சந்தி பிரித்து அசை பார்க்கக் கூடாது. சந்தியோடுதான் அசை பிரிக்க வேண்டும்.
* அசையைப் பிரிக்கையில் மெய்யெழுத்தைக் கணக்கில் எடுப்பதில்லை. ஆனால் மெய்யெழுத்துதான் அசைகளைப் பிரிக்கிறது. 'கற்றார்' என்ற சீரைப் பிரித்தால் கற்+றார் எனப் பிரியும் 'ற்' என்ற மெய்யெழுத்தே இங்கு அசை பிரிக்கிறது. ஆனால் 'ற்' -க்கு மதிப்பு இல்லை. 'பார்த்தான்' என்ற சீரைப் பிரித்தால் பார்த்+தான் எனப் பிரியும். 'ர்த்' என இரண்டு மெய்யெழுத்து வரினும் மதிப்பில்லை. ஆய்த எழுத்தும் மெய்யெழுத்தைப் போலவே கணக்கில் எடுக்கப்படுவதில்லை.
* ஐ, ஔ ஆகிய நெட்டெழுத்துகள் ஏறிய மெய்யெழுத்துகளை நெடில்களாகக் கருத வேண்டும்.

### (2) சீர்

அசையின் எண்ணிக்கையைப் பொறுத்துச் சீர் ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவசைச் சீர், நாலசைச் சீர் என்று பெயர் பெறுகிறது.

#### (அ) ஓரசைச்சீர்

நேரசையையும் நிரையசையையும் ஓரசைச்சீர் என்பர். ஓரசைச்சீர் வெண்பாவில் ஈற்றடியின் இறுதிச்சீராக இடம் பெறும். அதற்கு வாய்பாடு நாள், மலர் எனப்படும்.

நாள், மலர் - இரண்டுமே நேரசை நிரையசையாக நிற்கின்றன.

வெண்பா இறுதி ஓரசைச்சீரை, அசைச்சீர் என்பார்கள்.

#### (ஆ) ஈரசைச்சீர்

நேரசை இன்னொரு நேரசையோடும் நிரையசையோடும் இணைந்து வரும். நிரையசை, இன்னொரு நிரையசையோடும் நேரசையோடும் இணைந்து வரும். இவ்வாறு ஈரசைகள் நான்கு வரும்.

| | | |
|---|---|---|
| நேர் நேர் | - தேமா | மாச்சீர் |
| நிரை நேர் | - புளிமா | |
| நிரை நிரை | - கருவிளம் | விளச்சீர் |
| நேர் நிரை | - கூவிளம் | |

மாவில் முடிவதை 'மாச்சீர்' என்றும் விளத்தில் முடிவதை 'விளச்சீர்' என்றும் கூறுவார்கள். தேமா, புளிமா என்பன மாமரத்தின் வகைகள். அச்சொற்களை அசை பிரித்தால் நேர்நேர், நிரைநேர் என்று வரும். கருவிளம் என்பது விளாம்பழ மரம். கூவிளம் என்பது வில்வ மரம். இவ்விரண்டு சொற்களையும் அசை பிரித்தால் நிரை நிரை, நேர் நிரை என்று வரும்.

*இதந்தரு மனையி னீங்கி*
*இடர்மிகு சிறைப்பட் டாலும்*

என்ற பாரதியாரின் பாடல் அடியில் உள்ள ஆறு சீர்களை அசைபிரித்துப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| இதந்+தரு | நிரைநிரை | - கருவிளம் |
| மனை+யி | நிரைநேர் | - புளிமா |

| | | |
|---|---|---|
| னீங்+கி | நேர்நேர் | - தேமா |
| இடர்+மிகு | நிரைநிரை | - கருவிளம் |
| சிறைப்+பட் | நிரைநேர் | - புளிமா |
| டா+லும் | நேர்நேர் | - தேமா |

*கருவிளம் புளிமா தேமா*
*கருவிளம் புளிமா தேமா*

என அவ்வடி, வாய்பாடு பெற்று ஓசை ஒழுங்கைக் காட்டுகிறது.

ஈரசைச்சீரை இயற்சீர் என்று குறிப்பிடுவார்கள். இது ஆசிரியப்பாவில் மிகுதியும் வருவதால் இதனை அகவல்சீர் என்றும் அழைப்பார்கள். ஈரசைச்சீர் வெண்பாவின் ஈற்றடியில் இறுதிச்சீராக இடம் பெறும் அதற்கு வாய்பாடு காசு,பிறப்பு என்பதாகும்.

### (இ) மூவசைச்சீர்

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் ஆகிய ஈரசைச்சீர் நான்குடனும் நேரசையொன்று சேர்ந்து 'நேரில்' முடியும் நான்கு மூவசைச் சீர்கள் உருவாகின்றன. தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் ஆகிய ஈரசைச்சீர் நான்குடனும் நிரையசையொன்று சேர்ந்து 'நிரையில்' முடியும் நான்கு மூவசைச் சீர்கள் வருகின்றன. நேரசையில் முடிவன 'காய்ச்சீர்' என்றும் நிரையசையில் முடிவன 'கனிச்சீர்' என்றும் அழைக்கப்படுகின்றன.

| **காய்ச்சீர்** | **கனிச்சீர்** |
|---|---|
| நேர் நேர் நேர் - தேமாங்காய் | நேர் நேர் நிரை - தேமாங்கனி |
| நிரை நேர் நேர் - புளிமாங்காய் | நிரை நேர் நிரை - புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் - கருவிளங்காய் | நிரை நிரை நிரை - கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் - கூவிளங்காய் | நேர் நிரை நிரை - கூவிளங்கனி |

காய்ச்சீர்கள் வெண்பாவிற்கு உரியன. எனவே அவற்றை வெண்சீர்கள் எனவும் அழைப்பார்கள். கனிச்சீர்கள் வஞ்சிப்பாவிற்கு உரியன. ஆதலால் அவற்றை வஞ்சிச்சீர்கள் எனவும் அழைப்பார்கள்.

மேற்கூறிய சீர்கள் அனைத்துமே கலிப்பாவிற்கு உரியன. கலிப்பாவிற்குத் தனியாகச் சீர்கள் இல்லை. மாச்சீர் விளச்சீர் என்பன ஈரசைச்சீர்கள் என்பதையும் 'காய்ச்சீர்' 'கனிச்சீர்'

என்பன மூவசைச் சீர்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

**(ஈ) நாலசைச்சீர் (பொதுச்சீர்)**

காய்ச்சீர் நான்கு, கனிச்சீர் நான்கு ஆகிய மூவசைச்சீர்களுடன் நேரசை சேரப் 'பூச்சீர்' எனப்படும் நாலசைச்சீர் எட்டு ஆகும். காய்ச்சீர் நான்கு கனிச்சீர் நான்கு ஆகிய மூவசைச் சீர்களுடன் நிரையசை சேர 'நிழற்சீர்' எனப்படும் நாலசைச்சீர் எட்டு ஆகும்.

| பூச்சீர் | நிழற்சீர் |
|---|---|
| நேர் நேர் நேர் நேர்-தேமாந்தண்பூ | நேர் நேர் நேர் நிரை-தேமாந்தண்ணிழல் |
| நிரை நேர் நேர் நேர்-புளிமாந்தண்பூ | நிரை நேர் நேர் நிரை-புளிமாந்தண்ணிழல் |
| நேர் நிரை நேர் நேர்-கூவிளந்தண்பூ | நிரை நிரை நேர் நிரை-கூவிளந்தண்ணிழல் |
| நிரை நிரை நேர் நேர்-கருவிளந்தண்பூ | நிரை நிரை நேர் நிரை-கருவிளந்தண்ணிழல் |
| நேர் நேர் நிரை நேர்-தேமாநறும்பூ | நேர் நேர் நிரை நிரை-தேமாநறுநிழல் |
| நிரை நேர் நிரை நேர்-புளிமாநறும்பூ | நிரை நேர் நிரை நிரை-புளிமாநறுநிழல் |
| நேர் நிரை நிரை நேர்-கூவிளநறும்பூ | நேர் நிரை நிரை நிரை-கூவிளநறுநிழல் |
| நிரை நிரை நிரை நேர்-கருவிளநறும்பூ | நிரை நிரை நிரை நிரை-கருவிளநறுநிழல் |

செய்யுளில் பொதுச்சீர்களான நாலசைச்சீர்கள் பெரும்பாலும் இடம் பெறுவதில்லை.

**(3) தளை**

சீர்களை ஒன்றுடன் ஒன்று சேர்ப்பதைத் 'தளை' என்பார்கள். தளைதல் என்றால் கட்டுதல் என்று பொருள். இரண்டு சீர்களை ஒன்றாகக் கட்டுதல் தளை என்றாகிறது. பாட்டில் முதலில் இருக்கின்ற ஒரு சீருடன் (நின்ற சீர்) வரும் சீரின் முதல் அசை ஒன்றுதலையும் ஒன்றாமையையும் தளை என்பார்கள். நின்ற சீரின் ஈறு நேரசையாக இருந்து வரும் சீரின் முதலசை நிரையசையாக வந்தும் பொருந்தினால் ஒன்றிய சீராகும். அவ்வாறின்றி நேருக்கு முன் நிரையும் நிரைக்கு முன் நேரும் வந்து பொருந்தாவிட்டால் ஒன்றாத சீராகும். இவ்வாறு செய்யுளில் வரும் தளைகள் ஏழு. அவற்றைக் காண்போம்.

**(1) நேரொன்றாசிரியத் தளை - மாமுன் நேர் (ஈரசைச்சீர்)**

தேமாச்சீர், புளிமாச்சீர் ஆகிய ஆசிரியச்சீர் முன் நேரசை வருதல்.

*'போது சாந்தம் பொற்ப ஏந்தி*

என்பதில் உள்ள முதற்சீர் போ+து-நேர் நேர்=தேமா, வரும் சீரான சாந்தம் என்பதன் முதல்அசை "சா" - நேரசை. மாமுன் நேர் வருவதால் இது நேரொன்றாசிரியத்தளை.

**(2) நிரையொன்றாசிரியத் தளை - விளமுன் நிரை (ஈரசைச்சீர்)**

கருவிளச்சீர் கூவிளச்சீர் ஆகிய ஆசிரியச்சீர்கள் முன் நிரையசை வருதல்.

*'அணிநிழல் அசோகமர்ந் தருள்நெறி நடாத்திய*

என்பதிலுள்ள முதற்சீர் அணி+நிழல்-நிரை=கருவிளம். வரும் சீரான 'அசோகமர்ந்' என்பதன் முதல் அசை 'அசோ'. நிரையசை. விளமுன் நிரை வருவதால் இது நிரையொன்றாசிரியத் தளை.

**(3) வெண்சீர் வெண்டளை - காய்முன் நேர் (மூவசைச்சீர்)**

தேமாங்காய் புளிமாங்காய் கூவிளங்காய் கருவிளங்காய் என்னும் வெண்பாச் சீர்களுக்கு முன்னே நேரசை வருதல்.

*யாமெய்யாக் கண்டவற்று ளில்லை*

என்பதில் உள்ள முதற்சீர் யா+மெய்+யாக்- நேர் நேர்=தேமாங்காய் வரும் சீரான 'கண்டவற்று'வின் முதல் அசை 'கண்'-நேர், காய் முன் நேர் வருவதலால் இது வெண்சீர் வெண்டளை.

**(4) இயற்சீர் வெண்டளை - மாமுன் நிரை, விளமுன்நேர் (ஈரசைச்சீர்)**

ஆசிரியத் தளைகளுக்கு நேர்மாறாக அமைவது இயற்சீர் வெண்டளை, நேரொன்றாத நிரையொன்றாத ஆசிரியத்தளைகள், வெண்சீர் வெண்டளைகள் ஆகின்றன.

**(அ) மாமுன்நிரை**

*அகர முதல எழுத்தெல்லாம்*

என்பதில் உள்ள முதற்சீர் அக+ர - நிரை நேர்=புளிமா வரும் சீர், முதல என்பதன் முதல் அசை 'மு' - நிரை. மாமுன் நிரை வருதலால் இயற்சீர் வெண்டளை.

**(ஆ) விளமுன்நேர்**

*மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*

என்பதில் உள்ள நின்ற சீரான முதற்சீர் மலர்+மிசை = கருவிளம்

வரும் சீரில் 'ஏகினான்' என்பதன் முதலசை 'ஏ' - நேர். விளமுன் நேர் வருவதால் இயற்சீர் வெண்டளை.

**(5) ஒன்றிய வஞ்சித்தளை - கனிமுன் நிரை (மூவசைச்சீர்)**

தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய சீர்கள் முன் நிரைவருதல்.

*தண்டாமரைத் தனிமலர்மிசை*

என்பதில் உள்ள நின்ற சீரான முதற்சீர் தண்+டா+மரை - நேர் நேர் நிரை = தேமாங்கனி, வரும் சீரில் தனிமலர்மிசை என்பதன் முதலசை தனி - நிரை. கனிமுன் நிரை வருவதால் ஒன்றிய வஞ்சித்தளை.

**(6) ஒன்றாத வஞ்சித்தளை - கனிமுன்நேர் (மூவசைச்சீர்)**

*வானோர்தொழ வண்டாமரைச்*

என்பதில் நின்ற சீரான முதற்சீர் வா+னோர்+தொழ - நேர் நேர் நிரை = தேமாங்கனி. வரும் சீர் 'வண்டாமரைச்' என்பதன் முதலசை 'வண்' நேரசை. கனிமுன் நேர் வருதலால் ஒன்றாத வஞ்சித்தளை.

**(7) கலித்தளை - காய்முன் நிரை (மூவசைச்சீர்)**

காய்ச்சீரான வெண்சீரின் முன் நிரைவருதல் கலித்தளை.

*செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி*

என்பதில் நின்ற சீரான முதற்சீரில் செல்+வப்+போர்க் - நேர் நேர் நேர் - தேமாங்காய். வரும் சீரான கதக்கண்ணன். - என்பதன் முதலசை 'கதக்' நிரை, காய்முன் நிரை வருதலால் கலித்தளை.

**தளை 1, மற்றும் 3 - நேர்முன்நேர்**

**தளை 2, மற்றும் 5 - நிரைமுன்நிரை**
**தளை 4 (அ) மற்றும் 7 - நேர்முன்நிரை**
**தளை 4 (ஆ) மற்றும் 6 -நிரைமுன் நேர்**

**தளை 1, மற்றும் 2 - ஆசிரியப்பா**
**தளை 3, மற்றும் 4 - வெண்பா**
**தளை 5, மற்றும் 6 - வஞ்சிப்பா**
**தளை 7 - கலிப்பா**

ஆசிரியத் தளைகள் இரண்டும் அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய

இலக்கியங்களில் வந்துள்ளன. வெண்டளைகள் இரண்டும் திருக்குறள், நாலடியார், நளவெண்பா ஆகியவற்றில் வந்துள்ளன. வஞ்சித்தளைகள் இரண்டும் மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை ஆகியவற்றில் விரவி வந்துள்ளன.

## (4) அடி

அடி என்பது செய்யுளுக்குரியது. 'வரி' என்பது உரைநடைக்குரியது. அடி என்பது பல சீர்களால் அமைவது. அடுத்து நடப்பதால் அடியெனப்படுகிறது. பாட்டு நடப்பதற்கு இது உதவுகிறது. செய்யுளில் ஓர் அடி பல வரிகளாகவும் எழுதப்படும். 'பா' என்பதில் குறைந்தது இரண்டு அடிகளாவது வரும். ஓரடியில் அமைவன நூற்பாக்கள் சூத்திரங்கள் ஆகியன.

ஓர் அடியில் இரண்டு சீர் முதலாகப் பல சீர்கள் வரும். அடியில் வரும் சீர்களின் எண்ணிக்கையைக் கொண்டு அடிக்குப் பெயரிடுகின்றனர்.

இரண்டு சீர் - குறளடி
மூன்று சீர் - சிந்தடி
நான்கு சீர் - அளவடி (அ) நேரடி
ஐந்து சீர் - நெடிலடி
ஆறு, ஆறுசீருக்கு மேல் - கழிநெடிலடி

## (5) தொடை

அடிகளிலும் சீர்களிலும் எழுத்துகள் ஒன்றுபடுமாறு தொடுப்பது தொடை. அது எதுகை, மோனை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டைத் தொடை, செந்தொடை என எட்டு வகையாக உள்ளது. தொடைகள் கவிதைக்கு ஓசையின்பத்தையும் அழகையும் ஆழத்தையும் தருகின்றன.

**(1) எதுகை:** அடிகளின் இரண்டாம் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது.

**குழலினி** *தியாழினி தென்பதம் மக்கள்*
**மழலைச்** *சொல்கேளா தவர்*

**(2) மோனை:** சீர்களில் முதலாம் எழுத்துகள் ஒன்றி வரத்தொடுப்பது.

*சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டூடே*

(3) **இயைபு:** அடிகளில் இறுதி எழுத்துகள் ஒன்றி வரத்தொடுப்பது.

*இல்லறம் என்பதோர் இனிமையின்* **எல்லை**
*இதைவிட மக்களுக் கின்பமும்* **இல்லை**

(4) **முரண்:** சொல்லோ பொருளோ முரண்படத் தொடுப்பது

*இரும்பின் அன்ன* **கருங்கோட்டுப்** *புன்னை*
**பொன்னின்** *அன்ன நுண்டா திறைக்கும்*

(5) **அளபெடை:** அடி தோறும் அளபெடை வரத் தொடுப்பது.

**ஓஒதல்** *வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை*
**ஆஅது** *மென்னு பவர்*

(6) **அந்தாதி :** ஓர் அடியின் ஈற்றில் நிற்கும் எழுத்தோ அசையோ சீரோ, அடியோ அடுத்த அடிக்குத் தொடக்கமாக வருவது அந்தாதி.

*உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்* மதி
**மதிநலன்** *அழிக்கும் வளங்கெழு முக்குடை*

(7) **இரட்டைத்தொடை:** ஓர் அடியில் முதலில் வந்த சொற்களே அந்த அடி முழுவதும் திரும்ப வருதல்.

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
*விளக்கினுச் சீற்றெரி* ஒக்குமே ஒக்கும்
*குளக்கொட்டிப் பூவின் நிறம்*

(8) **செந்தொடை:** மேலே சொன்ன தொடைகள் எவையும் பொருந்தி வராமல் எழுதுவது செந்தொடை.

தொடைகள் எட்டில் எதுகையும் மோனையுமே முக்கியமானவை. அவற்றைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம். எதுகையும், மோனையும் நாட்டுப்புறப் பாடல்களில் நிறைய உள.

*சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டூடே*

*நில்லென்று கூறி நிறுத்திவழி போனீரே*

என்ற பாடலில் எதுகை மோனை அமைந்திருப்பதைக் காணலாம். இதை எகனை மொகனை என்று நாட்டுப்புற மக்கள் கூறுவர்.

**எதுகை** (Rhyme)

தமிழ்க் கவிதைகளில் அடியின் தொடக்கச் சீர்களில் எதுகை இருக்கும். அடியை வேறுபடுத்தி உணர எதுகை உதவுகிறது. அடிகளில் இரண்டாம் எழுத்து ஒரே மாதிரியாக அமையும். போல முதல் எழுத்து குறிலாக இருப்பின் அடுத்த அடியிலும் குறில் இருக்க வேண்டும். நெடிலாக இருப்பின் நெடிலாக இருக்க வேண்டும். மாத்திரை அளவு, மாறி இருக்கக் கூடாது. கட்டு என்பதற்குப் பட்டு வருமேயொழியே பாட்டு எதுகையாக வராது.

குறள் வெண்பாவிற்கு இரண்டடிகளிலும் எதுகை வரும். வெண்பாவில் நாலடிகளுக்கும் ஒரே எதுகையும், இரண்டடிகளுக்கும், தனிச் சொல்லுக்கும் ஓர் எதுகையும், மற்ற இரண்டு அடிகளுக்கு ஓர் எதுகையும் வரும். விருத்தங்களுக்கு நாலடிகளிலும் எதுகை வரும். மெல்லின எழுத்துகள் எதுகையாக வரின் மெல்லின எதுகை என்றும் இடையின எழுத்து வரின் இடையின எதுகை என்றும் அழைக்கப்படும். ஓர் உயிர்மெய் எழுத்தின் வருக்கங்கள் (கா,கி,கீ,கு,கூ என்பது போல) வரின் வருக்க எதுகை எனப்படும்.

**மோனை** (Alliterarion)

மோனையில்லாத பாட்டில் இனிமை குறைவாக இருக்கும். நாட்டுப் புறப் பாடல்களில் மோனை உயிர்நாடியாக உள்ளது (மாமன் அடிச்சானோ? மல்லிகைப்பூ செண்டாலே). பழமொழிகளிலும் மோனை நிறைந்துள்ளது (கூழ் குடித்தாலும் கூட்டாய்க் குடிக்க வேண்டும்). சீர்களில் மோனை வரின் சீர் மோனை என்றும் பாடலின் அடிகள் அனைத்திலும் முதலெழுத்து ஒரே எழுத்தாக வரின் அடிமோனை என்றும் அழைப்ப சீர்களில் வரும் போது எல்லாச் சீர்களிலும் மோனை வரலாம். ஒன்று இரண்டு குறைந்தும் மாறி மாறியும் வரலாம்.

**ஓசை**

அகவற்பா - **அகவலோசை**
வெண்பா - **செப்பலோசை**
வஞ்சிப்பா - **தூங்கலோசை**
கலிப்பா - **துள்ளலோசை**

அகவல் என்பது அகவிக் கூறுகின்ற ஓசையைக் கொண்டது. செப்பல் என்பது சொல்லுகின்ற ஓசையைக் கொண்டது.

தூங்கல் என்பது ஒரே சீராகச் செல்லும் ஓசையைக் கொண்டது. துள்ளல் என்பது இடையிடையே உயர்ந்து தாழ்ந்து செல்லும் ஓசையைக் கொண்டது. தளைகளைப் பொறுத்து ஓசைகள் வேறுபடுகின்றன.

**அகவற்பா–ஓசை**

நேரொன்று ஆசிரியத் தளையால் பாடல் அமைந்தால் ஏந்திசை அகவலோசை கிடைக்கும். நிரையொன்று ஆசிரியத் தளையால் பாடல் அமைந்தால் தூங்கிசை அகவலோசை கிடைக்கும். இரண்டு தளைகளும் கலந்துவந்தால் ஒழுகிசை அகவலோசை கிடைக்கும்.

**வெண்பா–ஓசை**

எல்லாம் காய்ச்சீர்களாக (வெண்சீர் வெண்டளை) இருந்தால் ஏந்திசைச் செப்பலோசை வரும். இயற்சீரில் (ஈரசை) வெண்பா முடிந்தால் தூங்கிசைச் செப்பலோசை வரும். இயற்சீரும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வந்தால் ஒழுகிசைச் செப்பலோசை வரும்.

**பாவகையும் இனமும்**

பாவகை நான்கு எனினும் ஆசிரியப்பாவும் வெண்பாவுமே பெருவழக்காக உள்ளன. வஞ்சிப்பா, ஆசிரியப்பா போன்றது என்பதாலும் கலிப்பா, வெண்பா போன்றது என்பதாலும் இவ்விருவகைப் பாக்களின் இன்றியமையாமையை உணரலாம்.

*ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை*
*வெண்பா நடைத்தே கலியென மொழிப*

என்பதும் இதனை உறுதிப்படுத்துகிறது. எனவே ஆசிரியப்பா வெண்பா ஆகியவற்றின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் பார்ப்போம்.

**I. ஆசிரியப்பா**

பிற்காலத்துக் காப்பியங்களிலும் பிறவகை நூல்களிலும் புலவர்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தங்களையே ஆண்டிருக்கிறார்கள்.

சங்க காலத்தில் ஆசிரியப்பாக்கள் மிகுதியாக இருந்தன. ஆசிரியப்பா, அகவல் எனப்பட்டது. அகவல் என்றால் அழைப்பது; ஒருவரை அழைப்பதற்கேற்ற நடையமைப்பை